பாடம் 10

ஆகஸ்ட் 31–செப்டம்பர் 6



# சுவிசேஷத்தை வாழ்ந்துகாட்டுதல்

## ஓய்வுநாள் பிற்பகல்

**இவ்வார ஆராய்ச்சிக்கு:** *ரோமர் 8:20-23; யோவான் 3:16,17; மத் 9:36; எபே 2:8-10; 1யோவான் 3:16,17; வெளி 14:6,7.*

**மனன வசனம்:** கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு; ஒருவரும் பெருமைபாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல; ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையாயிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார். எபேசியர் 2:8–10.

தேவனுடைய கற்பனைகள், நிபந்தனைகள் அல்லது அறிவுரைகள் பொறுத்தவரையில், முயற்சிசெய்து இரட்சிப்பைச் சம்பாதிக்கலாம் அல்லது தேவதயவுக்குப் பாத்திரமாகலாம் என்கிற எண்ணமோ தூண்டுதலோ ஏற்படுகிறது. இயேசுவினாலும், சிலுவையில் அவர் நமக்காக மரித்ததாலும் தேவகிருபையால் இரட்சிக்கப்பட்ட பாவிகள் நாம் என்று வேதாகமம் வலியுறுத்துகிறது. இதற்குமேல் நாம் செய்வதற்கு எதுவுமில்லை. மனிதனில் காணப்படும் நன்மைஅனைத்தையும் சேகரித்து, ஆத்துமஇரட்சிப்பில் அவற்றுக்குப் பங்கிருப்பதாக தேவதூதர்கள்முன் சமர்ப்பித்தால், அந்த முயற்சி தேவதுரோகமெனப்புறக்கணிக்கப்படும்.’

எனவே, எளியவர்கள்மேல் மனதுருகி உதவிசெய்வது, கிரியைத்துவமாக இருக்கக்கூடாது. மாறாக, இரட்சிப்பு குறித்த நம் அறிவு பெருகும்போது, தேவ அன்பும் நம்மில் வளரும்; அந்த அன்புக்கு பாத்திரமான தரித்திரர்மேல் அக்கறைகாட்டுவோம். நம்மேலும் பிறர்மேலும் தேவன் எவ்வளவுக்கு அன்புகூருகிறாரென்பதை நாம் உணரும்போது, நாம் பிறரை நேசிப்போம்.

*2019, செப்டம்பர் 7 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்*

# ‘தேவன் இவ்வளவாய் அன்புகூர்ந்தார்’

‘தேவன் இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்’ என்று யோவான் 3:16 சொல்கிறது. உலகம் என்பதற்கான கிரேக்க வார்த்தை காஸ்மோஸ். ‘சிருஷ்டிக்கப்பட்டு, ஒழுங்கமைக்கப்பட்ட’ அனைத்தையும் அது சுட்டிக்காட்டுகிறது. இரட்சிப்பின் திட்டம் ஒட்டுமொத்த சிருஷ்டிப்பையும் உள்ளடக்கியதென, மனிதர்களின் இரட்சிப்புபற்றிக் கூறுகிற இந்த வசனம் சுட்டிக்காட்டுகிறது.

**கேள்வி: இரட்சிப்பின் திட்டத்தினுடைய விசாலமான நோக்கங்கள்பற்றி ரோமர் 8:20-23 சொல்வது என்ன?**

---

தனிப்பட்டவிதத்தில், ஒவ்வொருவரும் தேவனோடு வைத்திருக்கும் உறவின்படிதான் இரட்சிப்பைச் சொந்தமாக்கமுடியும். ஆனால், நீதிமான்களாக்கப்படுவதில், பாவங்கள் மன்னிக்கப்படுவது மட்டுமே சம்பந்தப்படவில்லை. இயேசுவினாலும் பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் தேவகுடும்பத்தை ஆண்டவர் உருவாக்கியிருப்பதால், நாம் பெற்ற பாவ மன்னிப்புக்காகவும் இரட்சிப்பின் நிச்சயத்திற்காகவும் நன்றியுள்ளவர்களாக இருந்து, நற்கிரியைகள்மூலம் உலகத்திற்குச் சாட்சிகளாக வாழ்வதும் அதில் அடங்கும்.

**கேள்வி: யோவான் 3:16,17இல், வச 17ஐ அதிகமாகப் புரிந்துகொள்ள வச 16 எவ்வாறு உதவுகிறது?**

---

நம்மை மட்டுமல்ல, மற்றவர்களையும் தேவன் நேசிக்கிறார் என்பதை ஒத்துக்கொள்வோம். நமக்குப் பிரியமானவர்களை அவர் நேசிக்கிறார் என்பது சந்தோஷம் தரும். நாம் ஊழியம்செய்கிற மக்களையும் தேவன் நேசிக்கிறார் என்பது, நாம் மக்களைத் தேடிப்பிடித்து, ஊழியம் செய்வதற்கு ஊக்கம் தரும். ஆனால், நமக்குப் பிடிக்காத அல்லது நாம் பார்த்துப் பயப்படுகிறவர்களையும் தேவன் நேசிக்கிறார். தேவன் எங்குமுள்ள எல்லாரையும் நேசிக்கிறார்; நமக்குப் பிடிக்காதவர்களையும்தான்.

தேவனிடமிருந்து பெறுகிற நன்மைக்கு நம்மைச் சுற்றிலுமுள்ள உலகம் ஓர் உதாரணமாக இருப்பதாக வேதாகமம் அடிக்கடி சுட்டிக்காட்டுகிறது: ‘அவர் தீயோர்மேலும் நல்லோர்மேலும் தமது சூரியனை உதிக்கப்பண்ணி, நீதியுள்ளவர்கள்மேலும் அநீதியுள்ளவர்கள்மேலும் மழையைப் பெய்யப் பண்ணுகிறார்.’ மத் 5:45. இந்த வாழ்க்கையே தேவன் தந்த ஈவுதாம். மனிதர்கள் அதை ஒத்துக்கொண்டாலும் ஒத்துக்கொள்ளாவிட்டாலும், எல்லாருமே அந்த ஈவைப் பெற்றிருக்கிறார்கள்.

மற்றவர்களையும் தேவன்தாம் சிருஷ்டித்திருக்கிறார், அவர்கள்மேல் அன்புகூருகிறார் என்பதை உணர்வது எவ்வாறு அவர்களையும் அவர்கள் சூழ்நிலைகளையும் பார்க்கும்போது நம் மனநிலையில் மாற்றத்தை உண்டாக்கவேண்டும்?

**திங்கள்** செப்டம்பர் 2

# மனதுருக்கமும் மனந்திரும்புதலும்

இரட்சிப்பும் மாபெரும் போராட்டமும் கலந்தே காணப்படுவது வாழ்க்கையைபற்றி ஓர் உண்மையைக் காட்டுகிறது. அதாவது விழுந்து, கீழ்த்தரமாகி, பாவத்திற்குள்ளான நிலையில் நாம் இருக்கிறோம்; நம் உலகமும் இருக்கிறது. முதலில் சிருஷ்டிக்கப்பட்ட உலகம் வித்தியாச மானது. இப்போது நாம் விழுந்துபோனாலும்கூட, தேவசாயல் நம்மில் உள்ளது. இன்று உலகம்முழுவதிலும் அதிக வேதனையையும், ஒடுக்கு தலையும், அடிமைத்தனத்தையும் உண்டாக்குகிற அதே பாவத்தன்மை தான் நம்மிலும் காணப்படுகிறது.

எனவே இவ்வுலகவாழ்வின் வேதனை, துக்கம், துன்பம், பேரிடர் கள்போன்றவற்றை நிச்சயம் நாம் உணர்ந்திருப்போம். உணராவிட்டால் நாம் இயந்திரமனிதர்களாகத்தான் இருக்கவேண்டும். உலகமும் அதன் பாவமும் இவற்றையே கொடுக்கக்கூடியவை என்பதை சங்கீதப்புத்தகத் தின் புலம்பல்களிலும், எரேமியாவின் துக்கங்களிலும், இயேசுவின் கண்ணீரிலும், அவருடைய மனதுருக்கத்திலும், குறிப்பாக தீமையால் பாதிக்கப்படுவோரின் அனுபவத்திலும் காணமுடிகிறது.

**கேள்வி: இந்த வசனங்களில் என்னென்ன விஷயங்கள் இயேசுவை மனதுருகச் செய்தன? மத் 9:36; 14:14; லூக் 19:41,42; யோவான் 11:35. நம்மைச் சுற்றிலும் காணப்படுகிற வேதனையைக் கண்டு மனதுருகுகிற ஓர் இருதயத்தைப் பெற என்ன செய்யலாம்?**

பாவமும் தீமையும் 'எங்கோ' இருப்பதாக, யாரோ ஒருவருடைய விழுகையால் உருவானதாக எண்ணக்கூடாது. 'நமக்குப் பாவமில்லை யென்போமானால் நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத் தியம் நமக்குள் இராது.' 1யோவான் 1:8. யாரோ ஒருவர் 'சட்டங்களை' மீறுவதால் அல்ல, பாவமானது தேவனுக்கும் அவருடைய மக்களுக் கும் இடையேயான உறவை முறிப்பதாலும், நம்முடைய பாவம் பிறரைப் பாதிப்பதாலும்தான் அது மிகுந்த பாதிப்பை உண்டாக்குகிறது. அப் படித்தான் வேதாகமத் தீர்க்கதரிசிகள் சொல்கிறார்கள். பாதிப்பு சிறிதா கவோ பெரிதாகவோ இருக்கலாம்; காரணம் பாவம்தான்.

இன்று உலகத்தில் காணப்படும் தீமைக்கும் அநிநாயத்திற்கும் தரித்திரத்திற்கும் ஒடுக்குதலுக்கும் சுயநலம், பேராசை, அற்பத்தனம், தப்பெண்ணம், அறியாமை, அறிவின்மை போன்றவைதாம் காரணங் களாக இருக்கின்றன. இந்தத் தீமையைப் போக்குவதற்கும், தேவ அன்பு நம் இருதயங்களில் குடிபுகுவதற்கும் முதலாவதுபடி நம் பாவத்தன் மையை நாம் அறிக்கையிடுவதுதான். 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத் தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.' 1யோவான் 1:9.

---

மேலோட்டமாக உங்களைப்பற்றிச் சிந்தியுங்களேன். நீங்கள் விழுந்தநிலையில் இருப்பதும், பாவப்பிரச்சனையில் பங்குவகிப்பதும் எவ்வாறெல்லாம் வெளிப்படுகிறது; இதற்கான ஒரே தீர்வு என்ன? நாம் நோக்கிப்பார்க்கவேண்டிய ஒரே நபர் யார்?

# செவ்வாய் செப்டம்பர் 3

## கிருபையும் நற்கிரியைகளும்

**கேள்வி: கிருபைக்கும் நற்கிரியைகளுக்கும் உள்ள தொடர்புபற்றி எபே 2:8-10 வசனங்கள் என்ன சொல்லுகின்றன?**

தேவனைத் தொழுதுகொள்ளவும், பிறருக்குச் சேவைசெய்யவும் நாம் சிருஷ்டிக்கப்பட்டிருப்பதாக வேதாகமம் சொல்கிறது. பாவமற்ற சூழலில் தொழுகையும் நற்கிரியைகளும் எப்படிப்பட்டவைகளாக இருக்குமென்பதை கற்பனைசெய்துதான் பார்க்கவேண்டும்.

ஆனால், இந்த உலகமோ பாவத்தில் விழுந்து, கீழ்த்தரமாகியுள்ளது. தேவன் தம் கிருபையால், உலகத்தின் பாவங்களுக்காக இயேசுவை மரிக்கக்கொடுத்தார். அதனால், பாவமன்னிப்புக்கும் குணமாகுதலுக்கும் வழிபிறந்துள்ளது. எனவே, பாவ உலகில் வாழ்ந்தாலும், நம் வாழ்க்கை தேவனுடைய கிரியையாக முற்றிலும் மாறுகிறது; அதனால், பிறர் வாழ்விலுள்ள வேதனையையும் பாதிப்பையும் சரிசெய்து குணமாக்கவும், தம்மோடு சேர்ந்து நாமும் பணியாற்றவும் தேவன் நம்மைப் பயன்படுத்துகிறார். எபே 2:10. 'பெறுகிறவர்கள் பிறருக்குக் கொடுக்க வேண்டும். உதவிகேட்டு எல்லா இடங்களிலிருந்தும் அழைப்புகள் வருகின்றன. மனிதர்கள் தங்கள் சகமனிதர்களுக்குச் சந்தோஷமாகச் சேவைசெய்யுமாறு தேவன் அழைக்கிறார்.' - *EGW, MH, p 103.*

தரித்திரரைக் கவனிப்பது, சிறுமைப்பட்டோரைத் தூக்கிவிடுவது, பசியோடிருப்பவரின் பசியாற்றுவது போன்ற நற்கிரியைகளைச் செய்வது இரட்சிப்பைச் சம்பாதிப்பதற்கோ, தேவனுக்குமுன் தகுதிப்படுவதற்கோ அல்ல. விசுவாசத்தால் கிறிஸ்துவுக்குள் அனைத்தும் நமக்குக் கிடைத்துவிடுகிறது. மாறாக, 'நாம் பாவிகள், தேவன் நம்மில் அன்புகூர்ந்து மீட்டார்' என்பதை உணரவேண்டும். சுயத்தை முக்கியப்படுத்தவும், பேராசைகொள்ளவும் எப்போதும் நம்மில் தூண்டுதல் ஏற்படுகிறது. ஆனாலும், சுயதியாகமும் தாழ்மையுமுள்ள தேவகிருபையானது நம்முடைய வாழ்க்கையை மாற்றக்கூடிய புதுவாழ்வையும் அன்பையும் நமக்குக் கொடுக்கிறது.

சிலுவையில் தேவன் தந்த பலி மகத்தானது, பூரணமானது. கிறிஸ்துவுக்குள் நமக்குக் கிடைத்திருப்பவை போதும்; அதோடு வேறு எதையும் நாம் கூட்டவேண்டியதில்லை. அதற்காக, கிறிஸ்துவில் நாம் பெற்றிருப்பதற்குப் பிரதிபலனாக நாம் எதுவுமே செய்யவேண்டியதில்லை என்று அர்த்தமல்ல. நாம் பதில்செய்யவேண்டும்; மற்றவர்களிடம் அன்புகாட்டுவதைவிடச் சிறந்த பதில் செயல் இருக்கமுடியுமா?

சிலுவையைக் கண்டபின் நம் பதில்செயல் என்னவாக இருக்கவேண்டும் என்பதை 1யோவான் 3:16,17 வசனங்கள் எவ்வாறு மிக வலுவாகச் சொல்லுகின்றன?

# மனிதர்கள் அனைவரும் சமமே

எல்லா மனிதர்களையும் எவ்வித பாகுபாடுமின்றி ஏற்றுக்கொள்ள வேண்டுமென இயேசு தம் ஊழியத்திலும் போதகத்திலும் வலியுறுத்தினார். மோசமான பெண்கள், வரிவசூலிப்பவர்கள், குஷ்டரோகிகள், சமாரியர்கள், ரோம நூற்றுக்கதிபதிகள், மதத்தலைவர்கள், சிறுவர்கள் என உண்மையான நோக்கங்களோடு தம்மை நாடிவந்த அனைவரையுமே மெய்யன்போடும் அக்கறையோடும் அவர் ஏற்றுக்கொண் டார். இரட்சிப்பின் ஈவும்கூட எல்லாருக்கும் உரியதுதான் என்பதை அதிக மாற்றங்களுக்குப் பிறகு ஆதிகாலச்சபை கண்டுகொள்ளவிருந்தது.

சுவிசேஷம் அனைவருக்கும் உரியதென முதல் விசுவாசிகள் போகப்போகப் புரிந்துகொண்டார்கள்; எனவே, நற்கிரியைகள்தாம் விசுவாசத்திற்கு ‘அழகு’ என்று வெறுமனே வற்புறுத்துவதை நிறுத்தினார்கள். சுவிசேஷம்பற்றி அவர்கள் புரிந்துகொண்ட மிகமுக்கியமான விஷயம் இது; ஏனெனில், இயேசுவின் வாழ்விலும் ஊழியத்திலும் மரணத்திலும் அவர்கள் அதைக் கண்டிருந்தார்கள். பேதுரு மற்றும் பவுல் போன்ற தனிப்பட்ட நபர்களும் (அப் 10:9-20), எருசலேம் ஆலோசனைச் சங்கத்தைக் கூட்டின சமயத்தில் ஒட்டுமொத்தச் சபையினரும் (அப் 15) இதுகுறித்து குழப்பத்தோடும் கேள்விகளோடும் இருந்தனர். ஆனால் தேவனுடைய அன்பும், அந்த அன்பு அனைவருக்கும் உரியது என்பதும், அவரைப் பின்பற்றுகிறவர்கள் அந்த அன்பின்படி வாழலாம் என்பதுமே நற்செய்தி என்று புரிந்துகொண்டார்கள்.

**கேள்வி: மனிதர் அனைவரும் சமம் என்பதை பின்வரும் வசனங்கள் எவ்வாறு சுட்டிக் காட்டுகின்றன? மற்றவர்களை நாம் அணுகுகிறவிதத்தில் இக்கருத்துகள் ஒவ்வொன்றும் என்ன தாக்கத்தை உண்டாக்கவேண்டும்?**

**மல் 2:10** __________

**அப் 17:26** __________

**ரோமர் 3:23** __________

**கலா 3:28** __________

நல்ல சமாரியன் உவமையின் வேதாகமப் படிப்பினையை கலா 3:28 சொல்கிறது. இவருக்கெல்லாம் நான் சேவைசெய்ய கடமைப்பட்டிருக்கிறேனா என்று வாக்குவாதம் செய்யாமல், எவருக்கும் சேவை செய்யவேண்டும். சேவைசெய்யமாட்டார்கள் என்று நாம் நினைத்தவர்கள் சேவைசெய்ய வந்தால் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாக இருக்கவேண்டும். ‘நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லாரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டோம்.’ 1கொரி 12:13.

உலகளாவிய மனிதகுடும்பத்தில் அனைவரும் சமம் என்பதை, சுவிசேஷத்தினால் ஐக்கியப்பட்டிருப்பவர்கள்மட்டுமே காணமுடியும். தேவனுடைய இரட்சிப்பின் அன்புதான் அந்த ஐக்கியத்தைத் தருகிறது. சிந்தியுங்கள்.

# நித்திய சுவிசேஷம்

'சகலஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்' சுவிசேஷத்தின் அழைப்பும் வேண்டுகோளும் கிறிஸ்தவ வரலாறு முழுவதிலும் கொடுக்கப்பட்டு வருகிறது. வெளி 14:6. ஆனால், கடைசிக்காலத்திற்கான இந்த நற்செய்தியின் புதுப்பிக்கப்பட்ட அறிவிப்பை வெளிப்படுத்தல் விவரிக்கிறது.

**கேள்வி: வெளி 14:6,7ஐ வாசியுங்கள். நித்தியசுவிசேஷம்பற்றி யோவான் 3:16 சொல்லும் பொதுச்செய்தி எவ்வாறு வெளி 14:7ன் குறிப்பிட்ட செய்தியில் காணப்படுகிறது?**

வெளி 14:7 மூன்று விஷயங்களை வலியுறுத்துகிறது; வேதவரலாறு முழுவதிலும் தீமை, வறுமை, ஒடுக்குதல் குறித்து தேவன் எவ்வளவுக்கு அக்கறையுள்ளவராக இருக்கிறாரென ஏற்கனவே நாம் ஆராய்ந்தபோது அவற்றைப் படித்தோம். அவை:

*நியாயத்தீர்ப்பு:* ஒடுக்கப்பட்டவர்கள் தங்களுக்கு நியாயம் கிடைக்க ஏங்கினதை வரலாறு முழுவதிலும் காணலாம். இக்கட்டில் இருக்கிறவர்களின் கூக்குரல்களைக் கேட்கிறவர் தேவன் என்று வேதாகமம் காட்டுகிறது. தாங்கள் அநியாயமாக நடத்தப்பட்டதாக எண்ணுகிறவர்கள் நியாயத்தீர்ப்பை நற்செய்தியாகப் பார்க்கிறார்களென்று சங்கீதப்புத்தகம் அடிக்கடி சொல்கிறது.

*தொழுகை:* எபிரெயத் தீர்க்கதரிசிகளின் எழுத்துகளில் ஒரு விஷயத்தை நாம் கவனிக்கலாம். அதாவது, தேவனுடைய மக்களெனச் சொல்லிக்கொண்டவர்களின் தொழுகையையும் நற்கிரியைகளையும் பற்றிப் பேசும்போது, அவர்கள் செய்த, செய்துவந்த தவறுகளோடு ஒப்பிட்டுச் சொல்லியிருப்பார்கள். உதாரணமாக ஏசா 58இல், ஏழை எளியோர் மேல் அக்கறைகாட்டி, அன்பின் சேவைகளைச் செய்வதே தமக்குப் பிரியமான தொழுகையென்று தேவன் அவர்களிடம் சொன்னார்.

*சிருஷ்டிப்பு:* மனிதர்களிடம் தேவன் நியாயத்தை எதிர்பார்ப்பதற்கு இது ஓர் அடிப்படை விஷயம். அதாவது, மனிதர்கள் அனைவரும் அவருடைய சாயலில் சிருஷ்டிக்கப்பட்டார்கள். அனைவரையும் அவர் நேசிக்கிறார். அனைவரையும் சமமாக மதிக்கிறார். அநியாய ஆதாயத்திற்காக, பேராசைக்காக மற்றவரை ஒடுக்கவோ அடக்கவோ கூடாது. விழுந்துபோன மனிதருக்கு தேவன் தரவிரும்புகிற மீட்பை, புது வாழ்வை, விடுதலையை ஏற்றுக்கொள்ளுமாறு கடைசிக்கால நற்செய்தி வலியுறுத்துகிறது. மெய்த்தொழுகை-பொய்த்தொழுகைக்கு மத்தியிலும், உபத்திரவத்திற்கு மத்தியிலும் (வெளி 14:8-12), சரியான பாதையில் நடக்கிற, தேவனுடைய கற்பனைகளிலும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்திலும் உறுதியாக நிற்கிற ஒரு கூட்ட மக்களை தேவன் தமக்காக வைத்திருப்பார்.

எளியவருக்கு உதவிசெய்யவேண்டும்; அதேவேளையில் முத்தூதுகளில் காணப்படும் நம்பிக்கையையும் எச்சரிப்புகளையும் அவர்களுக்கு அறிவிக்கவேண்டும். அதை எவ்வாறு நாம் செய்யலாம்?

# வெள்ளி செப்டம்பர் 6

## மேலும் படிக்க:

‘ஒட்டுமொத்த உலகமும் தம்முடைய திராட்சத்தோட்டமென தேவன் உரிமை பாராட்டுகிறார். இப்போது அது துரோகியின் கரத்தில் இருந்தாலும், இது தேவனுக்குத் தான் சொந்தம். சிருஷ்டிப்பைப்போல மீட்பின் மூலமும் இது அவருக்கே சொந்தம். உலகத்திற்காக கிறிஸ்து தியாகம்செய்தார். “தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.” யோவான் 3:16. அந்த ஒரே ஈவினால்தான் மற்ற அனைத்தும் மனிதனுக்கு அருளப்பட்டுள்ளன. ஒட்டுமொத்த உலகமும் தினமும் தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெறுகிறது. நன்றிகெட்ட நம் இனத்தினர்மேல் விழுகிற ஒவ்வொரு சொட்டு மழைத்துளியும், ஒவ்வொரு ஒளிக்கற்றையும் ஒவ்வொரு இலையும் பூவும் பழமும் தேவனுடைய நீடிய சாந்தத்தையும் மகா அன்பையும் சாட்சியிடுகின்றன’ கலா 3:28; எபே 2:13.

‘நம்பிக்கையில் கருத்துவேறுபாடு இருந்தாலும், வேதனையில் இருக்கும் மனிதர்களைக் கண்டால், அவர்களுக்கு உதவவேண்டும். ‘பரிவான வார்த்தைகளையும் உதவிகளையும் எதிர்பார்த்திருக்கும் களைத்த, ஏழை ஆத்துமாக்கள் நம்மைச் சுற்றிலும் இருக்கிறார்கள். பரிவும் உதவியும் தேவைப்படும் விதவைகள் இருக்கிறார்கள். தேவன் தம்மைப் பின்பற்றுகிறவர்களிடம் நம்பி ஒப்படைப்பதாகச் சொன்ன திக்கற்ற பிள்ளைகள் இருக்கிறார்கள். பெரும்பாலும் இவர்களைக் கண்டுகொள்ளாமலே கடந்துசெல்கிறோம். அவர்கள் கந்தைக்கோலமாக, அருவருப்பாக, அற்பமாகத் தெரியலாம்; ஆனால் அவர்கள் தேவனுடைய சொத்து. நம்மைப்போல அவர்களும் அவருடைய பார்வையில் விலையேறப்பெற்றவர்கள், விலைகொடுத்து அவர்களை வாங்கியிருக்கிறார். தேவனுடைய மாபெரும் குடும்பத்தில் அவர்களும் அங்கத்தினர்கள், கிறிஸ்துவின் உக்கிராணக்காரர்கள் அவர்களுக்கு பொறுப்பாளிகள்.’

### கலந்துரையாடக் கேள்விகள்

1 *நற்கிரியைகளையும் உதவிகளையும் செய்யும்போது, தேவன் நம்மை அங்கீகரிக்கும் அளவிற்கு அவை நம்மை நல்லவர்களாக்குகின்றன என்கிற எண்ணம் ஏற்படாமல் இருப்பதற்கு என்ன செய்யலாம்?*

2 *வித்தியாசம் இல்லாமல், கிறிஸ்துவுக்குள் அனைவரும் ஐக்கியமாக இருக்கிற ஓரிடமாக உங்கள் சபை உள்ளதா? அப்படி மாறுவதற்கு என்ன செய்யலாம்? உங்கள் சபை எல்லாரையும் அரவணைத்துக் கொள்கிறதா?*

3 *பிறருக்கு உதவிசெய்யவேண்டும், அதேசமயம் நற்செய்தியையும் அறிவிக்க வேண்டும். இதில் எவ்வாறு ஒரு சமநிலையைக் கடைப்பிடிக்கலாம்?*

**பாடச்சுருக்கம்: இரட்சிப்பின்திட்டத்திலும், இயேசுவின் வாழ்க்கையிலும் மரணத்திலும் வெளிப்படுகிற தேவ அன்புதான் நமக்கு மன்னிப்பும் ஜீவனும் நம்பிக்கையும் அருளுகிறது. அவருடைய கிருபையைப் பெறுகிறவர்கள், மற்றவர்களுடன் அதைப் பகிரவேண்டும். அதற்காகவே நாம் சிருஷ்டிக்கப்பட்டு, புதுபிறப்பைப் பெறுகிறோம். நற்செய்தியானது உறவுகளில் மாற்றத்தை உண்டுபண்ணுகிறது; எளியவர்களுக்கு உதவிசெய்ய நம்மை ஊக்குவிக்கிறது.**